**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**

**O.S. No. 173 / 2022**

பி.வா.சா.2 – அழகர் 14.11.2025

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நடராஜன் என்பவரது தம்பி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் பட்டா எண், சர்வே எண் எனக்கு தெரியாது. நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள தான செட்டில்மெண்ட் எந்த தேதியில் எழுதிக்கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்தில் பிரதிவாதிகளை தவிர வேறு யாருக்கும் பாத்தியமோ, அனுபவமோ கிடையாது என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
**மானாமதுரை**